**FIRST INFORMATION REPORT**

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129822

1. District : மாவட்டம் ஈ.ரோடு | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 02/AC/2024 | Date: நாள் 29.05.2024

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as amended – in 2018 | Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 24.05.2024 | Date to : நாள் வரை 28.05.2024

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.05.2024 | Time : நேரம் 07.00 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOl-II 29.05.2024 | Time : நேரம் 07.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி சத்தியமங்கலம் நகராட்சி அலுவலகம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. நாகராஜ் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெருமாள்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1954 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் தனியார் – செக்யூரிட்டி வேலை | (g) Address : முகவரி 73/2, ராஜீவ்நகர், அத்தாணி ரோடு, சத்தியமங்கலம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. பெரியசாமி, டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர், நகராட்சி அலுவலகம், சத்தியமங்கலம், ஈ.ரோடு மாவட்டம்.

   2) திரு. தினேஷ், தனியார் கட்டிட இன்ஜினியர், சத்தியமங்கலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது :-

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து - இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29.5.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 29.5.24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29.05.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 08.45 மணி

Name: பெயர் M. ரேகா,
Rank: நிலை காவல் ஆய்வாளர், ..... எண் .........
ஊ.5.5 பிரிவு, T.J. ரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No.2/AC/2024 u/s 7(a) of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 29.05.2024-ம் தேதி காலை 07.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது P.நாகராஜ், த/பெ பெருமாள், கதவு எண்.73/2, ராஜீவ் நகர், அத்தாணி ரோடு, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் : P.நாகராஜ், த/பெ பெருமாள், கதவு எண்.73/2, ராஜீவ் நகர், அத்தாணி ரோடு, சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். பெறுநர் : ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கருங்கல்பாளையம், ஈரோடு. அய்யா, நான் மேற்படி முகவரியில் எனது மனைவியுடன் குடியிருந்து வருகிறேன். நான் செக்யூரிட்டியாக வேலை பார்த்து வருகிறேன். எனது மகன் சுஜய் விசாகப்பட்டிணத்தில் ஒரு கம்பெனியில் வேலை செய்து வருகிறார். எனது மகள் சுஜன்யாவிற்கு திருமணம் முடிந்து அவரது குடும்பத்துடன் ஹைதராபாத்தில் வசித்து வருகிறார். எனது மகள் சுஜன்யாவிற்கு அவரது கணவர் பாபு சத்தியமங்கலம், தென்றல் நகர், சைட் எண்.7-ல் உள்ள 1803 சதுரடி நிலத்தை 2023-ம் வருடம் நவம்பர் மாத்தில் தான செட்டில்மென்ட் செய்து வைத்தார். அந்த நிலத்தில் எனது மகள் வீடு கட்டலாம் என்று முடிவு செய்து, வீடு கட்டுவது சம்மந்தமான வேலைகளை என்னை கவனிக்க சொன்னார். அதற்காக நான் கடந்த ஜனவரி மாதம் வீடு கட்டுவது சம்மந்தமாக சத்தியமங்கலத்தில் உள்ள இன்ஜினியர் தினேஷ் அவர்களை அவரது ஆபிசில் பார்த்தேன். அவர் என்னிடமிருந்த எனது மகளின் பத்திரத்தின் நகலை வாங்கி பார்த்துவிட்டு, இது சம்மந்தமாக ஆன்லைன் மூலம் சத்தியமங்கலம் நகராட்சியில் அப்ளை செய்ய வேண்டும் என்று சொன்னார். எனது மகள் வீடு கட்டுவது சம்மந்தமான அளவீடுகளை ஏற்கனவே சொல்லியிருந்ததை அவரிடம் சொன்னேன். அதற்கு தினேஷ் அவர்கள் சத்தியமங்கலம் நகராட்சி சம்மந்தமான வேலையை தான் பார்த்துக்கொள்வதாகவும், நீங்கள் வீடு கட்ட ஆரம்பிக்குமாறும் என்னிடம் சொன்னார். தினேஷ் அவர்கள் என்னிடமிருந்து வீடு கட்ட பிளான் போடுவதற்கு என்று ரூ.10,000/- வாங்கி கொண்டார். நானும் வீடு கட்டும் பணியை ஆரம்பித்தேன். பின்னர், வீடு கட்டும் அனுமதி சம்மந்தமாக தினேஷ் அவர்களை பார்க்கும்போதெல்லாம் நகராட்சி கமிசனர் லீவு, டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் திரு.பெரியசாமி லீவு அதனால் வேலை ஆகவில்லை என்று சொன்னார். பின்னர், கடந்த 16.05.2024-ம் தேதி இன்ஜினியர் திரு.தினேஷ் அவர்களின் ஆபிசிற்கு சென்று தினேஷ் அவர்களை பார்த்தபோது, அவர் என்னிடம் இருந்த எனது மகளின் பத்திரத்தின் நகலை வாங்கி கொண்டு, என்னிடம் 2,500/- ரூபாய் பணம் கேட்டு வாங்கினார். பின்னர், அவர் எனது மகளின் பெயரில் வீடு கட்டுவதற்கு ஆன்லைனில் விண்ணப்பித்தார்.

பின்னர், என்னிடம் காலியிட வரி இரசீது மற்றும் வீடு கட்டுவதற்கு விண்ணப்பத்திற்கான பதிவு கட்டண இரசீது ஆகியவற்றை கொடுத்தார். பின்னர், இன்ஜினியர் தினேஷ் அவர்கள் ஒரு வாரம் கழித்து வந்து அவரை பார்க்க சொன்னார். நானும், 24.05.2024-ம் தேதி தினேஷ் அவர்களை பார்க்க சத்தியமங்கலத்தில் உள்ள அவரது ஆபிசிற்கு சென்று பார்த்தேன். அவர் என்னிடம் எனது மகளின் பெயரில் வீடு கட்டுவதற்கு சத்தியமங்கலம் நகராட்சிக்கு ரூ.55,370/-கட்ட வேண்டிய டிமான்ட் நோட்டீசை கொடுத்து, அதை ஆன்லைனில் கட்ட வேண்டும் என்று சொன்னார். நான் அந்த விசயத்தை எனது மகளிடம் சொன்னேன். எனது மகள் எங்களுக்கு தெரிந்த மாருச்சாமி என்பவரின் பேங்க் அக்கவுண்டிற்கு ரூ.55,370/-பணம் அனுப்பினார். அவர் அந்த தொகையை தினேஷின் பேங்க் அக்கவுண்டிற்கு அனுப்பினார். தினேஷ் அவர்கள் ரூ.55,370/-தொகையை சத்தியமங்கலம் நகராட்சிக்கு ஆன்லைனில் செலுத்தி அதற்கான இரசீதை என்னிடம் கொடுத்தார். பின்னர், தினேஷ் அவர்கள் என்னிடம் சத்தியமங்கலம் நகராட்சியில் டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் திரு.பெரியசாமி வீடு கட்டுவதற்கு அனுமதி தருவதற்கு என்று ரூ.35,000/-ஐ உங்களிடம் வாங்கி தர சொல்லியிருக்கிறார் என்று சொன்னார். அதற்கு நான் எனது மகளை கேட்டுவிட்டு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். நான் எனது மகளை தொடர்பு கொண்டபோது அவர் தொகை அதிகமாக உள்ளது என்றும், குறைத்து கேட்டு பாருங்கள் என்று சொன்னார். நான் 27.05.2024-ம் தேதி காலை சுமார் 10.35 மணிக்கு தினேஷ் அவர்கள் அவரது செல்போனிலிருந்து எனது செல்போனிற்கு கூப்பிட்டு அவரது அலுவலகத்திற்கு வருமாறு சொன்னார். எனக்கு வேலையிருந்ததால் நான் போக முடியவில்லை. அதன் பின்னர், மதியம் சுமார் 02.00 மணிக்கு மீண்டும் என்னை செல்போனில் கூப்பிட்டு ஏன் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் பக்கத்தில் தான் இருக்கிறேன் வருகிறேன் என்று சொன்னேன். பின்னர், தினேஷ் அவர்களை சத்தியமங்கலத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் திரு.பெரியசாமி அவர்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளது, குறைத்து கொள்ள முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் அப்படியெல்லாம் தொகையை குறைக்க முடியாது என்று கறாராக சொல்லிவிட்டார். நான் கிளம்பி வந்துவிட்டேன். அன்றையதினம் மாலை சுமார் 06.15 மணிக்கு மீண்டும் என்னை செல்போனில் கூப்பிட்டு பெரியசாமி சார் ஏற்கனவே தெளிவாக என்னிடம் 35 ஆயிரம் ரூபாய் கொடுக்க சொல்லிவிட்டார். நீங்கள் குறைத்து கொடுத்தால் நான் தான் மீதித் தொகையை போட்டு அவருக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் பெரியசாமி சாரிடம் நான் நேரிடையாக கேட்டு பார்த்தால் அவர் கேட்ட தொகையில் இருந்து குறைப்பார் என்று நினைத்து, சத்தியமங்கலம், நகராட்சி அலுவலகத்திற்கு நேற்று 28.05.2024-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு சென்று டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் திரு.பெரியசாமி அவர்களை சந்தித்து வீடு கட்டுவதற்கான அனுமதி பற்றி கேட்டேன். அதற்கு அவர் ரெடி செய்துவிடலாம், பணம் பற்றிய விபரத்தை ஏற்கனவே இன்ஜினியர் தினேஷிடம் சொல்லியுள்ளதாக சொன்னார். அதற்கு நான், தினேஷ்

அவர்கள் ரூ.35,000/- கொடுக்க சொன்னார், கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு திரு.பெரியசாமி அவர்கள் ரூ.35,000/-ல் இருந்து கொஞ்சம் கூட குறைக்க முடியாது, பணத்தை தினேஷிடம் கொடுத்து விடுங்கள் என்று சொல்லிவிட்டார். நானும், இந்த விசயத்தை எனது மகளிடம் சொல்லிவிட்டேன். பின்னர், நான் யோசனை செய்து பார்த்தேன். சத்தியமங்கலம், நகராட்சிக்கு உரிய கட்டணத்தை செலுத்தியபிறகும், டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் திரு.பெரியசாமி அவர்கள் கேட்கும் ரூ.35,000/-த்தை லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால், ஈரோடு, லஞ்ச ஒழிப்பு பிரிவில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தேன். எனவே, எனது மகளின் பெயரில் சத்தியமங்கலத்தில் உள்ள இடத்தில் வீடு கட்டுவதற்கு இன்ஜினியர் தினேஷ் அவர்கள் மூலமாகவும், நேரடியாகவும் லஞ்சமாக பணம் கேட்கும். சத்தியமங்கலம், நகராட்சி டவுன் பிளானிங் இன்ஸ்பெக்டர் திரு.பெரியசாமி மற்றும் இன்ஜினியர் தினேஷ் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (P.நாகராஜ்) 29.5.24.

Sir, Received the above said computer typed complaint on 29.5.2024 at 07.00 hrs. Sd/- (xxxxxxxx) 29.5.24 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Sir, A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2024 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 08.00 hrs today on 29.05.2024. Sd/- (xxxxxxxx) 29.5.24 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.P.Nagaraj, S/o Perumal, D.No.73/2, Rajiv Nagar, Athani Road, Sathyamangalam, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

Rek 29.5.24

(M.Rekha)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.